**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
O.S 233 of 2022
பி.வா.சா.1 இசக்கியம்மாள்

| | | |
|---|---|---|
| Name | : | இசக்கியம்மாள் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 6.3.25 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 1ம்பிரதிவாதி நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கொடிவழி ஜாபிதா பி.வா.சா.ஆ1

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் அம்மா பெயர் திருமலையம்மாள். என் அப்பா பெயர் கிருஷ்ணன். என் பெற்றோர்களுக்கு எந்தவருடம் அரசு சொத்தை பட்டா கொடுத்தது என்றால் 35 வருடங்களுக்கு முன்பு இருக்கும். தாவா சொத்தை பட்டா கொடுப்பதற்கு முன்பு புறம்போக்கு இடமாக தான் இருந்தது என்றால் சரிதான். எல்லா இடமும் புறம்போக்காக தான் இருந்தது. தாவா சொத்திற்கு பட்டா கொடுக்கும்போது காலிமனையாக தான் இருந்தது என்றால் சரிதான். வீடுகள் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்பக்கம் யாருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அதே வருடம் தான் கொடுக்கப்பட்டது. 6 செண்டு இடத்திற்கு கொடுக்கப்பட்டது. என் பெற்றோர்களுக்கு 3 செண்டு மட்டும் தான்கொடுக்கப்பட்டது என்றாலும் 6 செண்ட் இடம் என் பெற்றோர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்லும் 6 செண்டில் தென்பக்கம் உள்ள 3 செண்டை என் சகோதரர் கோபால் என்பவருக்கு அரசாங்கம் தனியாக கொடுத்தது என்றாலும்

என் பெற்றோர்களுடன் சேர்த்து கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. என் அப்பாவிற்கு இரண்டு தாரம் ஆகும். என் அப்பாவின் முத்ததாரத்து மனைவி பெயர் பண்டாரத்தியம்மாள். என் அப்பா முத்ததாரத்தை எப்போது திருமணம் செய்தார் என்றால் நான் சிறு குழந்தையாக இருந்தபோது திருமணம் செய்தார். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது. அவரது பெயர் என்னவென்றால் சப்பையா ஆகும். சப்பையாவிற்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் அப்போது நான் சின்ன பிள்ளை தான். அவரது குழந்தைகள் பெயர் தான் பெயர் அன்பு, சிவகுமார், சுதாகர், கவிதா ஆகியோர்கள் ஆகும். மேற்படியார்கள் சென்னையில் வைத்து பிறந்தார்கள். என் அண்ணன் சப்பையா என் தகப்பனாருக்கு தான் பிறந்தார் என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அன்பு, சிவகுமார், சுதாகர், கவிதா ஆகியோர்கள் அவர்களது தகப்பனாருக்கு பங்கு உண்டு என்றும் அதை பிரித்துகொடுக்கும்படி கேட்கவில்லை என்றால் சரிதான். மேற்படி 4 நபர்களுக்கும் வழக்கு நடைபெறும் விபரம் தெரியும் என்றால் சரிதான். என் அப்பாவின் முதல் மனைவியின் மகன் சப்பையா உயிருடன் இருந்தபோது என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிரித்து வாங்கிகொண்டு சென்றதால் தான் இந்த வழக்கில் தரப்பினராக சேரவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு வேறு சொத்துக்கள் உண்டு என்றும் அதிலும் பங்கு கொடுக்கப்பட்டு விட்டது என்றாலும் சரியல்ல. வேறு சொத்துக்கள் எதுவும் கிடையாது. முத்த மனைவி பிள்ளைகளுக்கு பங்கு கொடுக்க வேண்டும் என நான் சொல்வது வாதிகளுக்கு பங்கு கொடுக்ககூடாது என்ற கெட்ட எண்ணத்தில் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தபோது எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரிதான். எனக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் எனக்கு 15வயதில் திருமணம் நடந்தது. எந்த ஆண்டு என்று எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின்பு நாளது வரை என் கணவர் வீட்டில் தான் வசித்து வருகிறேன என்றால் சரிதான். என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தபோது சொத்தில் பாகம் பிரித்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா முதலில் இறந்து விட்டார். என் அப்பா இறந்தபிறகு சொத்து என் அம்மாவிற்கு வந்து என் அம்மா எனக்கு கொடுத்துவிட்டார். என் அம்மா எந்தவருடம் தந்தார் என்றால் வருடம்

தெரியாது. 20வருடம் இருக்கும். சொத்து என் அம்மாவிற்கு வந்தபிறகு என் அப்பாவின் முத்த தாரத்திற்கு எப்படி பங்கு வரும் என்றால் என் அம்மா உயிருடன் இருக்கும்போதே அவர் திருமணம் செய்து கொண்டதால் பங்கு உண்டு என சொல்லுகிறேன். தாவா சொத்து என் பெற்றோர்கள் உயிருடன் இருந்த வரை வாய்மொழிபாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும், பாகம் பிரித்ததாக நான் கூறுவது பொய் என்றாலும் சரியல்ல. என் பெற்றோர்களுக்கு நானும், கருப்பம்மாள், கோபால் ஆகிய 3 பிள்ளைகள் ஆவோம்.கோபாலின் மனைவி தான் 1ம் வாதி கிருஷ்ணம்மாள் என்றால் சரிதான். கருப்பம்மாளின் மகள் தான் செல்வி என்றால் சரிதான். செல்வியை எனதுசகோதரர் கோபாலுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் வாதி செல்விக்கும் கோபாலுக்கும் பிறந்த குழந்தை என்றால் சரிதான். தாவா சொத்தில் என் பெற்றோர்கள் உயிருடன் இருந்தவரை பங்கு பிரிக்காததால் எனக்கு ஒரு பங்கும், என் சகோதர கருப்பம்மாளுக்கு ஒரு பங்கும், கோபாலுக்கு ஒரு பங்கும் உண்டு என்றால் சரியல்ல. முத்ததாரம் என்று ஒன்று கிடையாது என்றாலும் அவர்களுக்கு பாகம் எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பாக பிரிவினை செய்யாததால் தற்போது வரை பொதுவாக தான் அனுபவம் செய்து வரப்படுகிறது என்றால் சரியல்ல. தனிபட்டா போடப்பட்டுள்ளது. தாவா சொத்தை மோசடியாக வாதிகளுக்கு தெரியாமல் என்மகள் 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ4ன் மூலம் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ4ல் என் பெற்றோர்களுக்கு கிடைத்து வாரிசு அடிப்படையில் எனக்கு கிடைத்ததாக வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் என் சகோதரர் கோபால், மற்றும் என் சகோதரி கருப்பம்மாளுக்கு பாகம் பற்றி குறிப்பிடாததால் தாவா சொத்தில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. முன்பே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது. பாகம் பிரிக்காத சொத்தைபொறுத்து என் மகள் 2ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ4 ஆவணமும், அதே போல் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ5ஆவணமும் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் தற்போது வரை பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பாகம் பிரிக்காமல் பொதுவாக தான் அனுபவம் செய்து வருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் சரியாக தெரியாது. இந்த வழக்குதாக்கல் செய்தபிறகு நான் வீடு

கட்டியுள்ளேன் என்றால் அதில் வீடு இருந்தது. நான் 6 மாதத்திற்கு முன்பு தான் வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. அதில் வீடு இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல.என் அம்மா அதில் தான் இருந்து இறந்தார். அந்த வீட்டிற்கு தீர்வை செலுத்தியுள்ளார்களா என்றால் சின்ன வீடு என்பதால் தீர்வை இல்லை. அந்த வீட்டிற்கு மின்சார இணைப்பு  உள்ளது. தற்போது வரை காலிமனையாக தான் இருந்தது என்றாலும் வழக்கு தாக்கல் செய்தபிறகு தான் நான் வீடு கட்டினேன் என்றாலும் சரியல்ல. தற்போது வீடு கட்டிய பிறகு மீதியுள்ள காம்பவுண்ட் சுவர் கட்டினேன் என்றாலும் சரியல்ல. சொத்து சட்டப்படி பாகம் பிரிக்காததால் வாதிகளுக்கு 3ல்2பங்கு உண்டு என்றால் சரியல்ல.